IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, TIRUVARUR.
PRESENT: Thiru. G. Krishnan, B.A., L.L.B.,
Assistant Sessions Judge,
Tiruvarur.

**S.C.No.28/2019**

Deposition of witness for அ.த.சா.10 { Prosecution PW.10
{ Defence
{ Court

1. Name : திரு.ரெங்கநாதன்

2. Father Name : ரேணு

3. Village :

4. Taluk :

5. Calling :

6. Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of
**நாள். 30.09.2024**

**(1 முதல் 4 வரையிலான எதிரிகள் ஆஜர். 5 முதல் 7 வரையிலான எதிரிகள் ஆஜராகவில்லை, அவர்களுக்காக அவரது தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜராகி வழக்கு விசாரணை மேற்கொள்ள அனுமதிக்க வேண்டி தாக்கல் செய்த குவிமுச பிரிவு 317 ன் கீழான மனு அனுமதிக்கப்பட்டது)**

**முதல் விசாரணை**

நான் தற்போது வாழ்க்கை பஞ்சாயத்து, புத்தகளூர் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய கூலி வேலை செய்துவருகிறேன். இந்த வழக்கு

சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை._ஆஜர் முதலாம் எதிரி தமிழ்வாணனை எனக்கு தெரியும். அவர் ஊரில் தான் நான் பெண் கட்டியுள்ளேன். தற்போது காட்டப்படும் ஒப்புதல்வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர்களில் முதலில் உள்ள சாட்சி கையெழுத்துக்கள் என்னுடையதுதான். அ.சா.3 குஞ்சுப்பிள்ளை எனது மச்சான். சுமார் 4 வருடங்களுக்கு முன்பு ஒருநாள், போலீசார் வந்து எனது மச்சான் குஞ்சுப்பிள்ளை எங்கள் வீட்டிற்கு வந்தாரா என்று கேட்டார்கள். நான் வரவில்லை என்று சொன்னேன். பின்னர் என்னை குடவாசல் காவல்நிலையத்திற்கு அழைத்துச்சென்று தற்போது நான் காட்டிய கையெழுத்துக்களை போலீசார் வாங்கினார்கள். எதற்காக வாங்கினார்கள், அதில் என்ன விவரம் உள்ளது என்றெல்லாம் எனக்கு தெரியாது. ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.6. அருவாள் மற்றும் கடப்பாரை கைப்பற்றியதாக சொல்லப்படுவதற்கான கைப்பற்றுதல் மகசரில் உள்ள கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.7. இருச்சக்கர வாகனம் கைப்பற்றியதாக சொல்லப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.8. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக அனுமதிக்க கோரப்பட்டதன் அடிப்படையில், வழக்கின் சூழலை கருத்தில் கொண்டு அவ்வாறே அனுமதி வழங்கப்பட்டதன் அடிப்படையில் அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

போலீசார் என்னை விசாரணை செய்ததாகவும், கடந்த 29.11.2016 ஆம் தேதி ஆஜர் 1 ஆம் எதிரி தமிழ்வாணன், த/பெ.கணபதிராஜன் என்பவரை காட்டூர் பேருந்து நிறுத்தமருகே, குடவாசல் காவல்நிலைய காவல்அய்வாளர் பிற்பகல் 3 மணியளவில் கைது செய்து விசாரித்தபோது, அவர் இவ்வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டதை ஒப்புக்கொண்டு ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார் என சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் ஆஜர் 1 ஆம் எதிரி ஆஜர் செய்த அருவாள், கம்பிகைப்பாறை, மற்றும் இருச்சக்கர வாகனம் ஆகியவைகளை ஆய்வாளர் மகசர் தயார் செய்து கைப்பற்றியதாகவும், அப்போது நாங்கள் உடனிருந்து சாட்சி கையெழுத்துகள் போட்டதாகவும், போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. உண்மை விவரங்களை போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற மாற்றி தவறாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை - இல்லை**

G KRISHNAN

Digitally signed by G KRISHNAN
DN: cn=G KRISHNAN, c=+91
Date: 2024.10.01 11:52:29 +0530